மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பார்ட் 2 ஸ்கீம் பற்றி விளக்கம் கொடுக்க நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள் என்று தெரியும். மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : வினா எண்கள் 1015, 1016, 1017, 1018, 1019 மாண்புமிகு போக்குவரத்துத் துறை, சமூகநலத் துறை அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர்...............

MR. DEPUTY SPEAKER : No point of order during question hour.

சிறுதொழில்களை மேம்படுத்துவதற்கான அரசின் திட்டம்.

குறுகிய கால வினா எண் 15— திரு. மா. சின்னராசு: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களை மேம்படுத்த ' Centre for Appropriate Technology' ஏற்படுத்தும் அரசின் திட்டம் எந்த நிலையில் உள்ளது

(ஆ) எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும், (ஆ) தொழில் நுட்ப மையம் ஒன்று Centre for Appropriate Technology) அமைப்பதுபற்றி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டபின், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத் துணை வேந்தரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு பெறப்பட்டது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தொழில் நுட்ப மையம் அமைக்கிற கருத்து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த தொழில் நுட்ப மையத்தைத் துவக்கும் நோக்கம் என்ன ? கொள்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : துவக்கப்பட இருக்கிற தொழில் நுட்ப மையத்தினுடைய வாயிலாக தமிழ் நாட்டில் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், இந்தியாவில் வெளிநாடுகளில் உள்ள விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி தற்போதுள்ள தொழில்களை மேம்படுத்தவும் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கும் தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தவும் தொழில் நுட்ப மையம் பயன்படும். அதுமட்டுமல்ல,

இந்த மையம் விஞ்ஞானிகளையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்டிருக்கும். மற்றும் தமிழக தொழில் வளர்ச்சியில் இம்மையம் புதிய தோற்றத்தை உருவாக்கும். இந்தத் தொழில் மையத்தின் நோக்கங்கள் ஆறு :

1. பரவலாக உள்ள 'பொருத்தமான தொழில் நுட்பம்' பற்றிய தகவல்களைச் சேகரித்தல்.

2. கற்பித்தல், பயிற்சி ஆகிய இரண்டிற்கும் வகுப்புகள் நடத்துதல்.

3. பல துறைகளிலும் மற்றும் ஆராய்ச்சி மையங்களிலும் பொருத்தமான தொழில் நுட்ப திட்டங்களை உருவாக்குதல்.

4. நிரந்தர மற்றும் நடமாடும் பொருட்காட்சிகளை ஏற்படுத்துதல் போன்ற விரிவான செயல்களை மேற்கொள்ளுதல்.

5. பயிற்சிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நிர்வாகம் மற்றும் நிதி உதவிக்கும் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி திட்டங்களை செயல்படுத்தும் இதர நிறுவனங்களோடு தொடர்பு கொள்ளுதல்.

6. தக்க ஆலோசனை கூறும் மையமாகப் பணியாற்றுதல்.

[முற்பகல் 10-00]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தொழில் நுட்ப மையம் தொடங்க அரசுக்கு எவ்வளவு நிதி ஆதாரம் செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தை மூன்று பகுதிகளாக நிறுவுவதற்கு தொடர், மற்றும் தொடரா செலவினமாக 48 இலட்சம் தேவைப்படுமென்று இன்றைய தினம்

1981 மே 7]

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதைத் தமிழக அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் 'சென்டர் பார் அப்ரோப்ரியேட் டெக்னாலஜி' இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுதான் முதல்மையம். சிறுசிறு அளவிலே தனியார்கள் வைத்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்திலே அவர்களுக்காக இந்த மையத்தை வைத்திருக்கிறார்களே தவிர, இந்த அளவில் விரிந்த பரந்த சிறு தொழில்களுக்கு அதிக அளவிலே பயன்படுகின்ற அளவிற்கான முயற்சி இந்தியாவிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் முதல் முறையாக முயற்சி செய்யப்படுகிறது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாவட்ட தொழில் மையம் என்கின்ற முறையில் மாவட்டத்தினுடைய தலைநகரத்தில் இந்த தொழில் மையம் இப்போது இயங்கி வருகின்றது. அதுபோல, இந்த மையத்தை மாவட்ட ரீதியாக அந்தந்த தலைநகரத்தில் உருவாக்க, ஏற்படுத்த அரசு முனையுமா? அல்லது நம்முடைய மாநிலத்தின் தலைநகரத்தில் மாத்திரம் இதை ஏற்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஆராய்ச்சி நிறுவனம்; ரீசர்ச் சென்டராக இருக்கின்ற காரணத்தினால், இது ஒரு இடத்தில்தான் நிறுவப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில்களை மேம்படுத்தும் ஆராய்ச்சி கூடத்தை தமிழகத்திலே எத்தனை இடங்களில் அமைச்சர் அவர்கள் நிறுவ இருக்கிறார்கள் என்பதையும், அதுவும் குறிப்பாக தொழிற்பேட்டையுள்ள இராணிப்பேட்டையில்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே இதற்குப் பதில் சொல்லியாகி விட்டது.

[1981 மே 7

திரு. சோ.. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம் தமிழகத்தில் ஏற்பட்டிருக் கக்கூடிய சிறு தொழில்கள் சரியாக நடக்க முடியாமல், தொடர்ந்து நடக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், அவர்கள் வாங்கக் கூடிய ரா-மெடீரியல் சரியான விலையில் கிடைக்காத காரணத் தினாலும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட் களுக்கு சரியான மார்க்கெட் கிடைக்காத காரணத்தினாலும்தான் சீராக நடக்கவில்லை என்பதை அரசு ஆராய்ந்து, இது ஒரு ஆலோ சனை மையமாக இல்லாமல், அவர்களுடைய பொருட்களுக்கு நல்ல விலை கொடுத்து, வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலப் பொருள்கள் கொடுப்பதற்கு சிட்கோ நிறுவனம் இருக்கிறது. அதேபோல் சிட்கோ நிறுவனம் மூலமாக உற்பத்தி செய்யப்படு கின்ற பொருட்களை வாங்குவதற்கும் வசதிகளையெல்லாம் தமிழக அரசு செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இந்த தொழில்நுட்ப மையம், செண்டர் பார் அப்ரோப்ரியேட் டெக்னாலஜி வளர்ந்து வருகின்ற தொழில்களுக்கு தொழில்நுட்ப உதவியளிக்க, தொழில் அதிபர்களுக்கு கொடுக்கப்படுகின்ற முயற்சியாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (—) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

அ. வினாப் பட்டியலில் சேர்க்கப் பெற்ற வினாக்கள் தள்ளி வைக்கப்பெறுதல்,

திரு. என், எஸ், வி. சித்தன், பாயிண்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண மாக கேள்வி நேரத்தில் ஏறத்தாழ 20 கேள்விகள் இடம் பெறும். ஆனால், கடந்த சில நாட்களாக மன்றத்திலே ஒன்றிரண்டு அமைச்சர்கள் இல்லாத காரணத்தினால், சம்பந்தப்பட்ட கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டன. இது ஏதோ ஒரு நாள் ஏற் பட்டதென்றால் பரவாயில்லை. நீங்கள் 2, 3 நாட்களுக்கு முன் கொடுத்து விடுகிறீர்கள். நாங்கள் எங்களுக்கு இருக்கின்ற வேலைகளை யெல்லாம் ஒத்தி வைத்துவிட்டு, இங்கே வந்து

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATURE